# விவாகரத்தின் பின்னர் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சவால்கள் - சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**A.R. Ayesha Farzana(1), S.M.M. Mazahir(2)**

1&2 Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

(farzana.rasool5@gmail.com, mazahirsmm@seu.ac.lk)

**ஆய்வுச் சுருக்கம்**

விவாகரத்தின் பின்னர் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சவால்கள் அவர்களது குடும்பச் சிதைவுக்கும், நெறிபிறழ்வுக்கும், வறுமைக்கும் வழிகோலியுள்ளன. இந்தவகையில் இப்பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு அவசியமாகின்றது. சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களின் வாழ்வியல் நிலையினை கண்டறிந்து, அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சவால்களை பரிசீலிப்பதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. அளவு, பண்பு ரீதியிலான ஆய்வு முறையிலமைந்த இக்கட்டுரையை அமைப்பதற்கு ஆய்வுப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற பெண்களில் 144 பேரிடம் வினாக்கொத்து வழங்கப்பட்டும், ஆய்வு விடயத்துடன் தொடர்புடைய 10 பிரமுகர்களிடம் நேர்காணல் செய்யப்பட்டும் தகவல்கள் பெறப்பட்டு, அவை பகுப்பாய்வு செய்யப்பட்டதோடு அவை தொடர்பான ஆவணங்களும் மீளாய்வு செய்யப்பட்டது. விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களின் வாழ்வியல் நிலையானது வறுமை, குடும்பச் சுமை அதிகரிப்பு என்பவற்றோடு அவர்கள் கூலித் தொழில், தெருவோரப் பிச்சைக்காரர், மனநோயாளி, நெறிபிறழ்ந்த குடும்ப தலைவி போன்ற நிலைகளில் காணப்படுகின்ற அதே நேரம் அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சவால்களாக பொருளாதாரம், உடலியல், உளவியல் சார்ந்தவை, பாதுகாப்பு தொடர்பானவை, குடும்பத்தின் ஒதுக்கு நிலை, சமூகத்தின் ஒதுக்கு நிலை என்ற அமைப்புகளில் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். இவ்வாய்வு சமூக ஆர்வலர்கள், பொதுநல அமைப்புக்கள், குடும்ப ஆற்றுப்படுத்தலில் ஈடுபடுவோர் துணையாகக் கொள்வதற்கு ஏதுவானதாகும்.

**திறவுச் சொற்கள்**: சம்மாந்துறை, விவாகரத்து, முஸ்லிம் பெண்கள், வாழ்வியல் சவால்கள்.

**ஆய்வுப் பின்னணி**

மனிதனின் முதல் சமூக நிறுவனம் குடும்பம் என்ற வகையில் அதனைத் திருமணம் என்பதனினூடாக அவன் ஆரம்பிக்கின்றான். திருமணம் ஆண்-பெண் எனும் இரு வேறுபட்ட நபர்களை ஒரு சமூகத்தின் முதன்நிலை அத்திவாரமாகிய குடும்பம் என்ற கட்டமைப்பினுள் ஒன்றிணைக்கின்றது. திருமணத்தை வரவேற்கின்ற இஸ்லாம் விவாகரத்து எனும் மணமுறிவை வெறுக்கின்றது. ‘‘அனுமதிக்கப்பட்ட விடயங்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுக்கத்தக்கது தலாக் ஆகும்’’ (சுனன் அபூதாவூத்:13.3) எனும் ஹதீஸ் இதனைச் சுட்டிக்காட்டுகின்றது. ஒரு கணவன் மனைவியை விவாகரத்து செய்வதையே தலாக் என்று சொல்லப்படும். இது இல்லற வாழ்வை தொடர்ந்து நடத்த முடியாது என்று உறுதியான பின்னர் இறுதிக் கட்டத்தில் வேறு வழியின்றி ஒரு கணவனால் மேற்கொள்ளப்படுகின்றது. கணவன் எடுத்த எடுப்பிலேயே தனது மனைவியை தலாக் சொல்லக் கூடாது என்பதற்காகவே இஸ்லாம் பின்வரும் வழிகாட்டலை கூறியுள்ளது. ‘‘எவர்கள் கணவருக்கு மாறு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களோ, அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள். (திருந்தாவிட்டால்) படுக்கைகளில் அவர்களை வெறுத்து விடுங்கள். (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களுக்கு இலேசாக அடியுங்கள்.

அவர்கள் உங்களுக்கு கட்டுப்பட்டால் அவர்களுக்கெதிராக எந்த வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உயர்ந்தவனும், பெரியவனுமாக இருக்கின்றான்.'' (அல்குர்ஆன் 4:34)

குடும்ப வாழ்வில் சிறிய பிணக்குகள், சண்டைகள் ஏற்படுவது சகஜமானதும் தவிர்க்க முடியாததுமாகும். ஒரு கணவன் தனது குடும்பம், பிள்ளைகளின் எதிர்காலம், குடும்பப் பொறுப்பு என அனைத்தையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். ஏனெனில் விவாகரத்தின் பின் கணவனை விட பல மடங்கு குடும்பப் பொறுப்பு, பொருளாதார தேடல், சமூக அந்தஸ்து, பாதுகாப்பு என அனைத்து விதத்திலும் பாதிக்கப்படுபவளாக மனைவியே காணப்படுகின்றாள். இதனாலேயே அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு பொழுதிலும் ஏதோவொரு வகையிலான வாழ்வியல் சவாலுக்கு முகங்கொடுத்துக் கொண்டும், அதனால் தன் வாழ்வினை வேறு வடிவமைப்பில் அமைத்துக் கொண்டும், இஸ்லாமிய வழிமுறைகளை மறந்தும் ஆய்வுப் பிரதேசத்தில் செயற்படுவதனை இவ்வாய்வு பரிசீலனைக்கு உட்படுத்துகின்றது.

அந்த வகையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தின் வட அகலாங்கு $7^0$ 20'' க்கும், கிழக்கு நெடுங்கோடு $81^0$ 45'' இற்குமிடையே இந்து சமுத்திரத்தின் கடற்கரையிலுள்ள காரைதீவு கிராமத்திற்கு நேர்மேற்கே 4.8 கி.மீ தூரத்திலும் தற்போதைய மட்டக்களப்பு நகரிலிருந்து 48 கி.மீ தூரத்திலும் சம்மாந்துறைப் பிரதேசம் அமைந்துள்ளதோடு இதனுள் 21 கிராமங்களும் (சம்மாந்துறை, வீரமுனை, நெய்னாகாடு, மல்கம்பிட்டி, வளத்தாபிட்டி, மலையடிக்கிராமம், பளவெளிக் கிராமம், கல்லரிச்சல், விளினையடி, மல்லிகைத்தீவு, மல்வத்தை, கருவாட்டுக்கல், உடங்கா, தம்பிநாயகபுரம், மஜீட்புரம், இஸ்மாயில்புரம், ஹிஜ்ராபுரம், கணபதிபுரம், வள்ளுவர்புரம், புளக்ஜே கிழக்கு, புளக்ஜே மேற்கு) 51 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடங்குகின்றன. குறிப்பாக அவற்றின் 48 கிராமசேவகர் பிரிவுகளில் முஸ்லிம்கள் மட்டும் தனித்து வசிக்கின்றனர். இது 132.79 சதுர கிலோ மீற்றர் பரப்பளவும், 71,142 மக்கள் தொகையையும் கொண்டது. இப்பிரதேசத்தினுள் முஸ்லிம்கள் (61,691), தமிழர்கள் (8,474), பறங்கியர் (643), சிங்களவர்கள் (71), ஏனையவர்கள் (263) என அனைவரும் ஒன்றாக, சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். (பிரதேச செயலகம் சம்மாந்துறை, 2017)

பல்லின மக்கள் ஒன்றாக வாழ்ந்து வரும் சம்மாந்துறைப் பிரதேசமானது முஸ்லிம்களுக்கான நீண்ட வரலாற்றுப் பின்னணியையும், முஸ்லிம்களுக்கான தனியான சிறப்பையும் கொண்டு காணப்படுகின்றது. இவ்வாறான நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சம்மாந்துறை முஸ்லிம்கள் ஆரம்ப காலம் முதல் இன்று வரை இஸ்லாம் காட்டிய குடும்ப கட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து கணவன், மனைவி, பிள்ளைகள் என குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய குடும்பங்கள் இஸ்லாமிய நெறிமுறைகள், ஒழுக்க விழுமியங்கள், பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றைப் பேணி, குடும்ப கட்டமைப்பு சிதைவுறாமல் கட்டிக்காக்கின்ற போதும் சில குடும்பங்கள் இத்தகைய நிலையிலிருந்து நெறிபிறழ்ந்து காணப்படுகின்றன. இவ்வாறான நெறிபிறழ்ந்த குடும்பங்களில் குடும்பப் பிரச்சினையானது கடைசியில் விவாகரத்து எனும் நிலைக்குத் தள்ளி, அக்குடும்பங்களை நிர்க்கதிக்கு ஆளாக்கி, இறுதியில் அவர்களது வாழ்வுநிலை பல சவால்களுக்கு மத்தியில் அமைந்திருப்பதனை இவ்வாய்வு பரிசீலனைக்கு உட்படுத்துகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்கள் உளவியல், உடலியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு, குடும்ப உறவு சார்ந்த பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதோடு இதன் காரணமாக மனம் போன போக்கிலும், விரக்தியான நிலையிலும், வறுமை, தவறான வழிகாட்டல், குடும்ப சுமை எனும் நிலைகளிலும் தம் வாழ்வினை அமைத்துக்

கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. எனவே, இந்நிலையைப் பரிசீலனை செய்வதற்கு சரியான ஆய்வொன்று அவசியமாகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களின் வாழ்வியல் நிலையினை கண்டறிந்து, அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சவால்களை பரிசீலித்தல் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

அளவு, பண்புரீதியான முறையிலமைந்த இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். சம்மாந்துறைப் பிரதேசத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களில் 144 பேரிடம் வினாக்கொத்து கொடுக்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. அவற்றுடன் இவ்விடயத்துடன் நெருங்கிய தொடர்புடைய 10 பிரமுகர்களிடம் நேர்காணலும் செய்யப்பட்டது. ஆய்வுக்காக வினாக்கொத்து மூலமாக பெறப்பட்ட தரவுகளை அட்டவணைகள், வரைபடங்கள் மூலம் பெறுவதற்கு SPSS கணனி மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் குறியீட்டு முறையில் (Coding) பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆவணங்களும் மீளாய்வு செய்யப்பட்டு, இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவுகளும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல், பிரதான கண்டறித்லகள்**

ஆய்வுப் பிரதேசமான சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெறும் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் அவர்கள் தம் வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனால் அவர்களின் வாழ்வின் நிலை சிக்கல்கள் பல நிறைந்ததாக காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டவர்களில் 2012 இலிருந்து 2017 வரையான காலப்பகுதிக்குள் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களில் அதிகமானோர் மலையடிக் கிராமம், புளக் ஜே மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

**அட்டவணை1**: விவாகரத்து இடம்பெற்ற பிரதேசமும் வீதமும்


| **தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள்** | **தெரிவு செய்யப்பட்ட மொத்த பெண்கள்** | **சதவீதம் %** |
|---|---|---|
| சம்மாந்துறை | 18 | 12.5 |
| நெய்னாகாடு | 12 | 8.33 |
| மலையடிக் கிராமம் | 20 | 13.89 |
| கல்லரிச்சல் | 14 | 9.72 |
| விளினையடி | 15 | 10.41 |
| கருவாட்டுக்கல் | 10 | 6.94 |

| | | |
|---|---|---|
| உடங்கா | 13 | 9.02 |
| மஜீட்புரம் | 11 | 7.63 |
| புளக்ஜே மேற்கு | 19 | 13.19 |
| புளக்ஜே கிழக்கு | 12 | 8.33 |
| **மொத்தம்** | 144 | 100 |

மூலம்: காழி நீதிமன்ற அறிக்கை, 2017.

சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்கள் பல்வேறு விதமான உளவியல், உடலியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு, குடும்ப உறவு சார்ந்த பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதோடு அவர்களின் வாழ்வின் நிலையினையும் இஸ்லாத்திற்கு மாற்றமான முறையில் அமைத்துக் கொண்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**வரைபடம் 1**: விவாகரத்தின் பின்னராக எதிர் கொள்ளும் வாழ்வியல் சவால்கள்




மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு 2017

விவாகரத்தின் பின்னர் பெண் என்பவள் பல வாழ்வியல் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவளாக காணப்படுகின்றாள். அந்த அடிப்படையில் மேற்காட்டப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டாலும் பொருளாதார ரீதியான சவால்களுக்கே அதிகம் முகங்கொடுக்கின்றனர். அது மட்டுமன்றி விவாகரத்து செய்யப்பட்டவள் ஒரு பெண் என்ற அடிப்படையில் உடலியல், உளவியல் தாக்கங்களுக்கும் முகங்கொடுக்கின்றமை முக்கியமானது. அது போலவே சமூகத்தில் தனியாக வாழ்வதாலும், தனது அனைத்து விடயங்களையும் ஒரு பொறுப்புதாரி இன்றி தானே நிறைவேற்றுவதாலும் பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகளுக்கும் அதிகம் முகங்கொடுக்கின்றாள். அத்தோடு சமூகத்தின் இழி சொல் மட்டுமன்றி சமூகத்தால் ஒதுக்கப்படுவதும், குடும்பத்தவர்களால் ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவதும் இங்கு அவதானிக்கப்பட்டது. மேலும் வேறு வகையான சவால்கள் எனும் வகையில் அவர்களது பிள்ளைகள் சமூகத்தில் இழிவாக நடாத்தப்படல், பிள்ளைகளின் விலகல் நடத்தை, தவறான பெயர் சூட்டி அழைக்கப்படல் என்பவை 'வேறு' எனும் சவால்களுக்குள் உள்ளடக்கப்பட்டன.

விவாகரத்துப் பெற்ற பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சவால்களுள் பிரதானமான பங்கினை வகிப்பது பொருளாதார ரீதியான சவால்களேயாகும். பொருளாதாரம் எனும் போது வறுமை, கடன் சுமை, குடும்பச் செலவீனம் என்பவை முக்கியமான அம்சமாக மாறிவிடுகின்றது. விவாகரத்தின் பின்னர் ஒரு பெண்ணே குடும்பத்தின் தலைவியாக செயற்படுகின்றாள். அது மட்டுமன்றி அப்பெண்ணின் தேவை, அவளது குடும்பத்தின் (அவளது பிள்ளைகள்) தேவை என அனைத்தையும் நிறைவேற்றும்

பொறுப்பையும் அவளே சுமக்க ஆரம்பிக்கின்றாள். விவாகரத்தின் பின்னராக தனது வாழ்வின் பொருளாதார நிலை மிகவும் கஷ்டமாக உள்ளது என 65 பேர் (45.14%) பதிலளித்தனர். ''சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களில் அதிகமானோர் தமது குழந்தைகளை தாமே பொறுப்பேற்று வளர்த்து வருகின்றனர். இன்னும் பிள்ளைகளின் தந்தைமார் அதை விட்டும் தவிர்ந்திருப்பது மிகவும் வருத்தமான செயலாகும்'' (**நேர்காணல்: 02**) இஸ்லாத்தின் பார்வையில் பிள்ளைகளினைப் பொறுப்பேற்று பராமரித்தல் தந்தையின் மீது கடமையாகும். ஆனால் மனைவியரைத் தவிர்த்து, பிள்ளைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் இங்குள்ள பல தந்தைமார் காணப்படுகின்றனர். அதனால் அவர்களின் வாழ்வின் நிலை பெண் என்பதனைத் தாண்டி கூலித் தொழிலாளகளாக, பாலியல் தொழிலாளிகளாக, தெருவோர பிச்சைக்காரர்களாக அவர்களை மாற்றி விடுகின்றது.

பெண் என்ற ரீதியில் விவாகரத்துப் பெற்றவள் உடல், உள ரீதியாக அதிகமான சவால்களை தன் வாழ்வில் சந்திக்கின்றாள். தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடம் விவாகரத்தின் பின்னரான மனோநிலை பற்றி வினவப்பட்ட போது அதில் 97 பேர் (67.37%) திருப்தியில்லை எனும் பதிலை அளித்திருந்தனர். இவ்வாறான பதில் அளித்தவர்களில் அதிகமானோர் 1-5 வருடங்களுக்குள் இல்லற வாழ்வை மேற்கொண்டு விவாகரத்துப் பெற்றவர்களாக காணப்படுகின்றனர். உளரீதியாக விவாகரத்துப் பெற்ற பெண்கள் தமது கணவனோடு சேர்ந்து வாழவே விருப்பப்படுவதாக 75 பெண்கள் (52.08%) பதிலளித்திருந்தனர். உண்மையில் பெண் என்பவள் தனது குடும்பம், உறவுகள் என்பவற்றோடு பிணைந்திருக்கவே விரும்புகின்றாள். அத்தோடு விவாகரத்தின் பின்னர் ஒரு பெண்ணுக்கு மறுமணம் செய்து அவளது உடலியல், உளவியல் தேவைகளை நிறைவேற்றி வைப்பது என்பது இப்பிரதேசத்தில் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. அதாவது தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் 11 பெண்களே மறுமணம் செய்துள்ளனர். மேலும் விவாகரத்தின் பின்னர் தாம் அநாதரவான நிலையில் காணப்படுவதாக 64 பெண்கள் (56.54%) கூறினர்.

விவாகரத்து செய்யப்பட்டவள் ஒரு பெண் என்ற வகையில் பாதுகாப்பு ரீதியாக தன் வாழ்வில் பல சவால்களை சந்திக்கின்றாள். அவள் தமது அன்றாடத் தேவைகள், வீட்டை விட்டு வெளியே செல்லல், பிரயாணம் செய்தல் என அனைத்திற்கும் திருமணத்தின் முன்பு தமது பெற்றோரில் தங்கியிருப்பது போன்று திருமணத்தின் பின் அவளின் அனைத்து விடயங்களினதும் பாதுகாவலனாக அவளது கணவனே செயற்படுகின்றான். விவாகரத்தின் பின் இந்நிலை மாற்றமடைந்து அவள் தனது அனைத்து விடயங்களுக்காகவும் பெற்றோர் தவிர்ந்து மூன்றாம் நபரின் உதவியை நாடுபவளாகவும் காணப்படுகின்றாள். இம்மூன்றாம் நபர்கள் சில வேளைகளில் இஸ்லாம் உறவு கொள்ள அனுமதிக்காத ஆண்களாகக் காணப்படுகின்றனர். இதனால் ஹராமான ஆண்-பெண் தொடர்பு, விபச்சாரம், சீர்கெட்ட நடைமுறை என அவர்களின் வாழ்வின் நிலை மாற்றமடைந்து செல்கின்றது. விவாகரத்தின் பின்னரான பாதுகாப்பின் நிலை பற்றி தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடம் வினவப்பட்ட போது அசாதாரணமான நிலையில் காணப்படுவதாக 54 பேர் (47.78%) பதிலளித்தனர். இவர்களில் அதிகமானோர் இளம் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட சவால்களினால் அவர்களது வாழ்வின் நிலை சமூகத்தை விட்டு ஒதுக்குப்படல், சமூகத்தின் பழிசொல்லுக்கு ஆளாகுதல், தற்கொலை அதிகரிப்பு, பாலியல் நோய்களின் அதிகரிப்பு எனக் காணப்படுகின்றது. அவர்களுக்கு பாதுகாப்பின்மையால் விபச்சாரம், கடன் சுமை, தவறான வழிகாட்டல், மார்க்கம் காட்டும் வழிமுறை மறந்து செயற்படல், போதைப் பொருள் பாவனை, விலகல் நடத்தை, தெருவோர யாசகம், மன நோய் என அவர்களைக் கொண்டு சேர்க்கின்றது.

இத்தகைய பிரச்சினைகளின் தாக்கத்தால் அண்மைக் காலங்களில் இப்பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்றதன் பின்னர் பெண்களின் நிலையும், அவளை நம்பிய அவளது குடும்பத்தின் நிலையும் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவு துன்பம் நிறைந்த ஒன்றாக காணப்படுகின்றது என்பதனை இவ்வாய்வினூடாக கண்டறிய முடிகின்றது. இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாவதோடு, விவாகரத்து செய்யப்பட்ட அப்பெண்ணின் அந்தஸ்தானது சமூகத்தில் கீழ்த்தரமானதாகவும், பரிதாபகரமானதாகவும் நோக்கப்படுகின்றது. அத்தோடு இவ்வாறான பெண்களுக்கு மறுமணம் செய்து வைப்பது இப்பிரதேசத்தில் மிக அரிதாகவே இருக்கின்றது.

**விதந்துரைகள்**

மேலே கூறப்பட்டதற்கிணங்க சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்களினது வாழ்வியல் சவால்களை குறைப்பதற்கும், எதிர்காலத்தில் இச்சவால்களுக்கு அவர்கள் முகங்கொடுக்காதிருப்பதற்குமாக சில ஆலோசனைகளை முன்வைப்பது அவசியமாகும். அதன்படி இவ்வாய்வின் முடிவுகள் பின்வரும் விதந்துரைப்புகளை முன்வைக்கின்றது.

1. விவாகரத்து பற்றிய இஸ்லாமிய நோக்கினை குறிப்பிட்ட பிரதேசத்திற்கு ஆழமாகத் தெளிவுபடுத்தல்.
2. இஸ்லாம் மணமக்கள் தேர்வில் எதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வழிகாட்டியுள்ளதோ அதனைப் பின்பற்றி மணமக்களை தெரிவு செய்தால் இவ்வாறான விவாகரத்து ஏற்படுவதனைத் தவிர்க்க முடியும். ஏனெனில் இத்தகைய வழிகாட்டல் படி மணமக்கள் தேர்வு அமையாத போதே பல்வேறு குடும்பப் பிரச்சினைகள் எழக் காரணமாக உள்ளது.
3. திருமணத்திற்கு முன்னர் தாயும் தந்தையுமே பிள்ளைகளின் முன்மாதிரிகளாவர். பிள்ளை வளர்ப்பின் போதே எதிர்கால குடும்பத் தலைவனையும், தலைவியையும் பயிற்றுவிக்கின்றோம் என்ற உணர்வுடனும், சிந்தனையுடனும் தமது பிள்ளைகளை அவர்கள் வளர்க்க வேண்டும்.
4. கணவனும் - மனைவியும் தங்களுக்குள் பிரச்சினை வருகின்ற போது எடுத்த எடுப்பில் விவாகரத்திற்குச் சென்று விடாமலும், மனோ இச்சையைப் பின்பற்றி விடாமலும் பிரச்சினையையும், அதற்கான காரணத்தையும் இருவரும் இணைந்து தேட வேண்டும். பின்னர் பிரச்சினையைக் கலந்தாலோசித்து அல்குர்ஆன், சுன்னா அடிப்படையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.
5. விவாகரத்து செய்யப்பட்ட பெண் என்ற வகையில் இஸ்லாம் அவர்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள், கடமைகளை சிறப்பாக நிறைவேற்றல். இதில் விவாகரத்தின் பின்னரான இத்தா, விரும்பின் மறுமணம், அவர்களுக்குரிய மதா∴ எனப்படும் தொகை போன்ற இஸ்லாம் வழங்கியுள்ள சலுகைகளின் அடிப்படையில் செயற்படல்.
6. விவாகரத்து செய்யப்பட்ட பெண் இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அறிந்திருத்தல்.
7. விவாகரத்துப் பெற்ற பெண்களினதும் அவர்களது குடும்பத்தினரினதும் வாழ்வியல் சவால்களை கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கை மேம்படவும், பொருளீட்டவும், சுயதொழிலில் ஈடுபடவும் வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கல்.
8. இஸ்லாமிய அமைப்புக்கள் சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றான விவாகரத்து, அது தொடர்பான விவகாரங்களைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.
9. விவாகரத்துப் பெற்ற பெண் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழவும் அவர்கள் அடுத்த மனிதர்களுக்கு சமமாகச் செயற்படவும் உரிமையுண்டு என்ற விடயம் சமூகத்தில் பரவலாக்கப்படல் வேண்டும்.

10. பைத்துல் ஸகாத், பைதுல் மால் மற்றும் சமூக நல அமைப்புகள், விதவைகள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதோடு, அவர்களின் முதன்மைப் பிரச்சினையான வறுமையை ஒழிப்பதற்கு முன்வர வேண்டும்.

**முடிவுரை**

சம்மாந்துறைப் பிரதேசத்தில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சவால்கள் அவர்களது குடும்பச் சிதைவுக்கும், நெறிபிறழ்வுக்கும் வழிகோலியுள்ளன. இவற்றுள் பொருளாதார, உடல், உள, பாதுகாப்பு ரீதியான சவால்களே முதன்மையானவையாகும். இன்னும் சமூகத்தின் ஒதுக்கு நிலை, இழிசொல், குடும்பத்தின் ஒதுக்குதல்களும் சவால்களாக காணப்பட்ட போதிலும் மேற்கூறப்பட்ட முதன்மையான சவால்களே அதிகமாக விவாகரத்துப் பெற்ற பெண்களின் வாழ்வியல் நிலையை மாற்றியமைக்கக் கூடியதாக காணப்படுகின்றன. அதனால் இவ்வாய்வின் கண்டறிதல்கள் சமூக ஆர்வலர்களுக்கும், அமைப்புக்களுக்கும் துணையாக அமையவல்லது எனக் கருத முடியும்.

**உசாத்துணைகள்**


- அப்துல் ரஸ்ஸாக், எம். ஏ. (1997). "இஸ்லாமிய வாழ்வியல் பிரச்சினைகளும், தீர்வுகளும்", கொழும்பு: உலக இஸ்லாமிய அழைப்பு சமூகம்.
- சூலனி கொடிகார, ஸபானா குல்பேகம். (2009). "இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம்", கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செளயல் முன்னணி.
- பௌசுல், எம்.பி. (2015). இலங்கை முஸ்லிம் சமூகத்தினரிடையே பெருகியுள்ள விவாகரத்தும், சமூகக் கட்டமைப்பில் அதன் தாக்கங்களும், "*உண்மை உதயம்*", பரகஹதெனிய: ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யா.
- மித்ரா, (2012). விவாக விவாகரத்துச் சட்டத்தின் குறைபாடுகளால் திசைமாறும் பெண்கள் வாழ்வு", "*விடிவெள்ளி*", கொழும்பு.
- முஹம்மது கான், அ. (23.10.2013). "வதைக்கும் விவாகரத்து வழக்குகள்", retrieved from http://khanbaqavi.blogspot.com/2013/10/?m=1 on 25th October 2017
- ஸமட், எம். எம். ஏ., (07.28.2016). "வழிகாட்டல்களை வலியுறுத்தும் விவாகரத்துக்கள்", retrieved from http://www.madawalanews.com/2016/07/blog-post_556.html?m=1 on 27th October 2017
- Jalaldeen, M.S. (2004). "The Muslim Law of Marriage Divorce & Maintains in Sri Lanka", Colombo: Peace, Education and Research Publishers.
- Wazeema, T., Jayathunga, N. (2017). Impact of Divorce among Muslims in Sri Lanka, "*International Journal of Arts and Commerce*", 6 (2).